ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2176/20 - 2020 මැයි මස 22 වැනි සිකුරාදා - 2020.05.22

*2176/20 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டம்***

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், மீன் வளத்துறை மற்றும் நீர் வளங்கள் அமைச்சின் பரிந்துரைகளுடன் மீன் வளத்துறை மற்றும் நீர் வளங்கள் அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ள எந்தவொரு தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் உற்பத்தியாளர்களினதும் இறக்குமதி சம்பந்தமான 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதிக்கான 2165/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில், பட்டியலிடப்பட்டுள்ள எச். எஸ். தலைப்பு 03.03 இன் கீழ் ஜெக் மற்றும் ஹோஸ் மெகரல்* (Trachurus spp. *எச். எஸ். குறியீடு 0303.55 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள) மீதான, கிலோ கிராமிற்கு 10% அல்லது கிலோ கிராமிற்கு 150 ரூபா, இரண்டில் எது கூடியதோ அந்த விசேட வியாபாரப் பண்ட அறவீட்டில் இருந்து கிலோ கிராமிற்கு 6 ரூபாவை அறவிட்ட பின்னர் மீதமாக உள்ள பெறுமதி கைவிடப்படல் வேண்டுமென இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*இந்தக் கட்டளை 2020 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதியிலிருந்து 3 மாதங்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.*

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, மே 21.*

*06-195*